III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.57/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 20-01-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : து.குமார் | Village | : |
| Father's Name | : துரை | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>குறுக்கு விசாரணை</u>

எனது சொத்து எனக்கு திரும்ப கிடைக்க வேண்டும் என பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ஏலம் விடுவதற்கு முன்னால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். வா.த.சா.19 என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. அது ஆங்கிலத்தில் உள்ளதால் என்னால் படிக்க இயலவில்லை. பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. அது ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. நான் 2015 ல் கடன் வாங்கினேன். எந்த தேதி எந்த மாதம் என்று எனக்கு தெரியாது. நான் ரூ.4,00,000 கடன் வாங்கினேன். நான் ரூ.8,00,000 கடன் வாங்கினேன் என்றும் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ரூ.4,00,000 த்திற்கு அடமான பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த கடனுக்கான வட்டி விகிதம் மாதத்திற்கு ரூ.100 க்கு ரூ.2. அதற்கான மாத வட்டியாக ரூ.35,100 வீதம் 5 மாதம் கட்டினேன். அதன் பின்னர் இரண்டு தடவை ரூ.25,000 வீதம் கொடுத்தேன். அதன் பின்னிட்டு ரூ.50,000 ஒரு முறை கொடுத்தேன். மேற்கூறியவாறு நான் பணம் திருப்பி கொடுத்தற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். முதலாம் பிரதிவாதி எனக்கு ரசீது கொடுக்கவில்லை. ஒரு கணக்கு பட்டியல் தான் கொடுத்தார்.

அதை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. 2016 ல் முதலாம் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டு அறிவிப்பு அனுப்பினார். 2016 ல் முதலாம் பிரதிவாதி நான் ரூ.4,00,000 பெற்றுக்கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தது சம்மந்தமாக ஒரு அறிவிப்பும் நான் ரூ.4,00,000 பெற்றுக்கொண்டு அடமான பத்திரம் எழுதி கொடுத்தது சம்மந்தமாக இன்னொரு அறிவிப்பும் அனுப்பினார் என்றால், ஒரு அறிவிப்பு தான் எனக்கு கிடைக்கப்பெற்றது. நான் பெற்றுக்கொண்ட அறிவிப்பிற்கு பதில் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. அதன் பின்னிட்டு முதலாம் பிரதிவாதி அறிவிப்புகள் அனுப்பிய வண்ணம் இருந்தார். சுமார் 10 அறிவிப்புகள் நான் பெற்றுள்ளேன். பணத்தை திருப்பி கொடுப்பது சம்மந்தமாக நான் முதலாம் பிரதிவாதியிடம் சென்று பேசினேன். ஆனால் முதலாம் பிரதிவாதி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. வா.த.சா.5 க்கு அதை மறுத்து பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. முதலாம் பிரதிவாதி 28.01.2020 ஆம் தேதியிட்டு எனக்கு அனுப்பிய அறிவிப்பை தாக்கல் செய்ய உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். சொத்து ஏலத்திற்கு வந்த பின்னர் தான் முதலாம் பிரதிவாதியிடம் சென்று பேச்சு வார்த்தை நடத்தினேன் ஆனால் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டாம் பிரதிவாதி நடத்திய ஏலத்தில் நான் பங்குகொண்டேன் என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் பங்கு கொண்டாரா என்றால் அவரும் பங்கு கொள்ளவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கணக்கு விவரங்களை யார் போட்டது என்றால் எனது வழக்கறிஞர் போட்டார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனக்கு தேவையான ஆவணங்களை மட்டும் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனது

சுயநலத்தை கருத்தில் கொண்டு உண்மையை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் முதலாம் பிரதிவாதிக்கு பணம் எதுவும் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ரூ.8,00,000 கடன் பெற்றுக் கொண்டு ரூ.4,00,000 த்தை திருப்பது கொடுப்பது சம்மந்தமாக மட்டும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் ஆதலால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.